# உழவன்! (விவசாயி)



பசித்த வயிற்றுக்குப் பாணையில் சோறு எப்படிக் கிடைக்கும்?
ருசித்த வாயும் பசித்த வயிறும் நினைப்பது உண்டோ!
மசித்துக் குழைவாய்ச் சுழல்கையில், நாக்கும் நினைக்கும்!
மரணம் வரையில் மானிட வாழ்வில் உணவே எல்லை!

கரணம் போட்டு விளைச்சல் செய்யும் உழவர் கூட்டம்;
மரணம் கொண்டு, துயரில் மூழ்கி மடிவதைக் காண்பீர்!
அரணாய் நின்று உணவுப் பொருளை அளிப்பவன் அவனே!
அரசின் அச்சு ஆள்வதும் அதனால், நினைப்பார் உண்டோ?

பரிசாய் நினைத்து அவரைப் போற்றுதல் வேண்டும்!
அருந்தவ உழவரின் உழைப்பே வாழ்வை நிலைக்கும்!
பெருந்தகை வள்ளுவன் பெருமைகள் சொன்னான்!
படித்தவர் தாமும் மறந்தார் அதனையும் அன்றோ!



பிடித்த உணவை வாங்கி உண்பவர் அறிவரோ உண்மை!
கொடுத்தவன் அவனே இறைவனின் கட்டளை எனவாய்;
அடுத்தவர் பசியை நினைத்து வாழ்பவன் அவனே!
கொடுத்தவன் அழுவதை அறிவரோ உண்பவர்தாமே!

படித்தக் கூட்டம் உணவின் ருசியைச் சொல்லும்!
எடுத்து உண்கையில் நினைக்குமோ உழவன் தன்னை!
கொடுத்தவன் அவனோ கொடுமையில் வாடும் அவலம்!
சிவந்த கைகளின் கரடுமுரடு வாழ்வைச் சொல்லும்!

அவரும் அடுத்து பணத்தை தேடும் ஆசை கொண்டால்,
எவர்தான் இங்கு நிறைவாய் வாழக் காண்போம்!
கவலைக் கொண்டோர் எவரேனும் உண்டோ!
அவர்தம் வாழ்வு அவலம் ஆனால், உணவு ஏது?



சுவரின்றிச் சித்திரம் செய்யும் செயலும் உண்டோ!
தவறும் மனத்தைக் கொஞ்சம் திருந்திடச் செய்வீர்
உழவரின் நிலையில் உண்மை அறிவீர்! மண்ணில்,
உணவின்றி வாழ ஏதும் தனிவழி உண்டோ?

**கவிவளவன் ஆகிய கு.ப.அசோகன் 03-02-2021**

**(இத்தலைப்பை என்னுள் விதைத்த தம்பி திரு அகமது மீரானுக்கு நன்றி)**